பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 20 ஞாயிற்றுக்கிழமை 02.06.2024 கதிர் 207

# தேர்தல்களை பிற்போட முழுமையான எதிர்ப்பு

## சட்டத்தரணிகள் கூட்டிணைவு அறிவிப்பு

இலங்கையின் ஜனநாயகத்தைக் கேள்விக்குட்படுத்தக்கூடியவாறான 'தேர்தல் பிற்போடல்' முயற்சிகள் முற்றுமுழுதாக நிராகரிக்கப்படவேண்டும் என சட்டத்தரணிகள் கூட்டிணைவு வலியுறுத்தியுள்ளது.

சட்டத்தரணிகள்கூட்டிணைவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ☞ 2

## இது ரகசியம் அல்ல!

சில நாட்களுக்கு முன்னர் - முள்ளிவாய்க்கால்நினைவேந்தலை ஒட்டி-தமிழ்நாட்டில்ஒருபரப்பரப்பான சூழல் உ-ருவானது. அது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பதைப்பற்றியது. அருட்திருஜெகத் புஸ்பார் அடிகளார் இது தொடர்பில் ஊடகங்களில் தெரிவித்த கருத்து இந்தப் பரபரப்புக்குக் காரணமாக இருந்தது.

தலைவர் பிரபாகரன் உயிரோடு இருக்கிறார், அவர் மீண்டும் வந்து போராட்டத்திற்குத் தலைமை தாங்குவார் என்று தமிழ்நாட்டின் பழ நெடுமாறன் போன்ற தலைவர்கள் தெரிவித்து வரும் நிலையில், தலைவர் இல்லை அவர் வீரச்சாவடைந்துவிட்டார்என்றுஜெகத் புஸ்பார் அடிகளார் தெரிவிக்கிறார்.

முன்னாள் போராளிகள், தளபதிகள், தலைவரோடு கடைசிவரையில் இருந்தவர்கள், புலம்பெயர்புலிச்செயற்பாட்டாளர்கள் என்று பலருடனும் நேரில் ☞ 2

## டீசல் விலை குறைந்தாலும் பஸ் கட்டணங்கள் குறையாது

டீசல் விலை குறைக்கப்பட்டாலும் விலைச் சூத்திரத்திற்கு அமைய பஸ் கட்டணம் குறைக்கப்பட மாட்டாதென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இருசந்தர்ப்பங்களில்டீசலின்விலை தொடர்ச்சியாக குறைக்கப்பட்டாலும், அதன் சதவீதம் 2.8 ஆகவே காணப்படுவதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

பஸ் கட்டணங்களை குறைப்பதாயின், அந்த வீதமானது 4 அல்லது அதனை விடவும் அதிகமாக இருக்க வேண்டியது அவசியமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் சஷி வெல்கம தெரிவித்தார்.

எவ்வாறாயினும், விலைச் ☞ 2

## சு.கட்சி பிரதிநிதிகள் மாநாடு நேற்று கொழும்பில் நடந்தது

சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் மாநாடு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் நேற்று நடைபெற்றது.

கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திற்குத்தொகுதிஅமைப்பாளர்களை அழைப்பது தொடர்பில் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டின்நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ☞ 2

## உரிய நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்படுவது மிக அவசியம்

### சட்டத்தரணிகள் சங்க தலைவரும் தெரிவிப்பு

நாட்டின்தேசியதேர்தல்கள் பிற்போடப்படக்கூடாது. அவை உரியகாலத்தில் ஜனநாயக முறைப்படி நடத்தப்படவேண்டியது அவசியம் என்று இலங்கை சட்டத்தரணிகள்சங்கத்தின்முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்துஅவர்மேலும் தெரிவித்ததாவது:

அரசியலமைப்பில் திருத்தம் செய்வதன் ஊடாக மாத்திரமே ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிக்க முடியும் என சுட்டிக்காட்டியுள்ளார்.'அரசியலமைப்பின் 83(பி) சரத்தின் பிரகாரம் அவ்வாறானதொரு திருத்தத்துக்கு பாராளுமன்றத்தில்மூன்றில்இரண்டு பெரும்பான்மை ஆதரவும், அதனைத்தொடர்ந்து ☞ 8

## உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்பட்டேயாகவேண்டும்

### ரெலோவின் நிலைப்பாடு அதுதான் என்கிறார் ஜனா எம்.பி.

உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்பதே தமதுரெலோகட்சியின்நிலைப்பாடு என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில்அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

சிங்கள பௌத்த தலைவர்களுக்கும் தற்போதுள்ள ஜனாதிபதிக்கும் தேர்தல்களை ஒத்திப் போடுவது என்பது கைவந்த கலையாகும். 2018ஆம் ஆண்டு தற்போது உள்ள ஜனாதிபதி அப்போதைய பிரதமராக இருந்த காலத்தில் எங்களது தமிழ் தேசிய கூட்டமைப்பு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் ஆலோசனைக்கு அமைவாக நாடாளுமன்றத்தில் சட்டமூலம் முன்வைக்கப்பட்டும் இன்றுவரை மாகாண சபைத் தேர்தல் நடைபெறாமல் உள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிதேர்தலைஒத்திவைக்க முடியாது. என்பது எல்லோருக்கும் தெரியும். நாடாளுமன்றம் நீதிமன்றம் ஊடாக அனுமதிகளை பெற்று மக்கள் ஆணையின் ☞ 8

## யாழ். நூலகம் எரிக்கப்பட்ட 43ஆவது நினைவேந்தல்

### மாநகர ஆணையர் தலைமையில் நேற்று

தென்கிழக்காசியாவின் மிகப்பெரிய நூலகமாகத் திகழ்ந்த யாழ் பொது நூலக எரிப்பு இடம்பெற்றதன்43ஆவது ஆண்டுகள் கடந்துள்ளதனை நினைவுகூரும் நினைவேந்தல் யாழ். பொதுநூலகத்தில்நேற்று இடம்பெற்றது.

யாழ். மாநகர சபையின்ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தலில் யாழ். பொது நூலகத்தின் பிரதம நூலகர் சிவகரன் அனுசியா, நூலக ஊழியர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

நூலகம் எரிக்கப்பட்டபோதும் அதனுடன் தொடர்புடைய வன்முறைகளின்போதும் உயிரிழந்தவர்களுக்காக அங்கு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தென்கிழக்காசி ☞ 8

## ஆசியாவின் பிரமாண்ட நூலகத்திற்கு புத்தகங்கள் சேகரிக்கும் பணி ஆரம்பம்

ஆசியாவின் பிரமாண்ட நூலகத்திற்காக புத்தகங்கள் சேகரிக்கும் பணி நேற்று மட்டக்களப்பில் தொடங்கியது. இதற்கான புத்தகத் திருவிழா நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இராஜாங்கஅமைச்சர் சந்திரகாந்தனின் முயற்சியினால் மட்டக்களப்பில் இந்த பிரமாண்டநூலகம்அமைக்கப்பட்டுவரும்நிலையில் அதன்நிர்மாணபணிகள் பூர்த்தியாக்கப்பட்டுவிரைவில் திறப்பு விழா காணவுள்ள நிலையில் இந்த நூல் சேகரிக்கும்பணிகள்ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நூலக புத்தக வள ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மு.பவளகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர்சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு ☞ 2

## கடைக்குச் சென்ற 2 சிறுவர்கள் குட்டையில் சடலங்களாக மீட்பு

### ஊர்காவற்றுறை, சின்னமடுவில் நேற்றுப் பரிதாபம்

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறைபொலிஸ் பிரிவிற்குட்பட்ட, சின்னமடு பகுதியில் வீதிக்கு அருகேயுள்ள குட்டை போன்றசிறியநீர்நிலை ஒன்றில் இருந்து இரண்டு சிறுவர்களின் சடலங்கள் நேற்று இரவு 8 மணியளவில் மீட்கப்பட்டுள்ளன.

11 வயதுடைய நிரோசன் விதுசா, 5 வயதுடைய நிரஞ்சன் அனுஷ்கா என்ற இரண்டுசிறுவர்களுமே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சிறுவர்கள் இருவரும் துவிச்சக்கர வண்டியில் கடைக்கு சென்றிருந்தனர். அவர்கள் வீட்டுக்குத் திரும்பாததை அடுத்து அவர்களைத் தேடிய உறவினர்கள் வீதிக்கு அருகேயுள்ள ☞ 8

## ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வலியுறுத்தி முன்னணியினர் பரப்புரை



ஜனாதிபதிதேர்தலை புறக்கணிக்க கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று மாலை மூன்று மணியளவில் துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

சிறீ லங்காவின் ஒற்றையாட்சி அரசமைப்புநீக்கப்பட்டு சமஷ்டி அரசமைப்பு உருவாக்கப்படுவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும் வரை ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்போம் என்ற தொனிப்பொருளில் மக்களிடையே ☞ 8

## யாழ் நகரில் பட்டப்பகலில் பெண் எரித்துக் கொலை

### சவக்காலைக்கு அழைத்துச் சென்று சம்பவம்

யாழில் குடும்பப் பெண்ணை அழைத்து வந்துதலையில்தீமூட்டிய சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது. இதனால் பலத்த தீக்காயத்திற்குள்ளான பெண்சிகிச்சைபயனின்றி உயிரிழந்தார்.

இந்தக் குற்றம் தொடர்பான சந்தேக நபரைபொலிஸார்கைது செய்துள்ளனர்.

யாழ். நகரிற்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்ற இப்பரபரப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

42 வயது மதிக்கத்தக்க குடும்பப் பெண் ஒருவரை ஆண் ஒருவர் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு யாழ். குருநகரில்உள்ள ☞ 8

## இனி இது .....

பேசிய பின்னரே தான் இந்த விடயத்தைப் பகிரங்கமாக அறிவிக்கின்றேன் என்று அவர் தெரிவித்தார். அதுவும், மனைவி மதிவதனி எதிரிகளாலோ வேறு யாரா-லுமோ இறக்கக்கூடாது என்பதற்காக அவருக்குத் தனது கைகளாலேயே சாவைப் பரிசளித்த பின்னர் தலைவர் தனது வாழ்வை முடித்துக்கொண்டார் என்று ஜெகத் புஸ்பார் தெரிவிக்கின்றார்.

தலைவர் இருக்கின்றார் என்று இப்போதும் சொல்லி வருபவர்கள், புலம்பெயர் நாடுகளில் புலிகளின் முதலீடுகளைக் கையாண்டு வருபவர்களே என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். அவர்கள் வசம் உள்ள பணத்தை முன்னாள் போராளிகளுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்குமாகச் செலவழிப்பதற்குப் பதில், தலைவர் வரட்டும் கணக்குச் சொல்கிறோம் என்றும், தலைவர் உயிருடன் உள்ளார் அவருக்கு நாம் கணக்குக்காட்டினால் சரி என்றும் தம்மைநியாயப்படுத்துவதற்காகவே புலிகளின் இந்த முதலீட்டுப்பிரிவினர் இப்படித் தலைவரைப் பற்றிப் பொய் சொல்லி வருகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே சண்டையில் படுகாயமடைந்திருந்த, தலைவரின் மகள் துவாரகா இறுதிச்சண்டையின் போது உயிரிழந்துவிட்டார் என்றும் ஆனாலும் ஒரு போலியான பெண்ணை துவாரகாவாகத் தமிழ் மக்கள் முன்பாக நிறுத்துவதற்கும் இந்தத் தரப்பினரே கடந்த காலங்களில் முயன்றார்கள் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இதையெல்லாம் சொல்வதற்கு இவர் யார், பக்கத்தில் இருந்து இவர் எல்லாவற்றையும் பார்த்தாரா என்பது உட்பட ஜெகத் புஸ்பாரைப் பற்றிய கடும் விமர்சனங்களை சமூக ஊடகப் போராளிகள் விளாசித் தள்ளிவருகிறார்கள். வெறிகொண்டு மூர்க்கமாகப் பாய்கிறார்கள்.

தலைவர் தொடர்பில் தான் சொல்பவற்றை நேரில் கண்ட சாட்சியங்கள் என்று எவரும் இல்லை என்பதை ஜெகத் புஸ்பாரே ஒப்புக்கொள்கிறார். தனது கருத்துக்கள் எல்லாம் அவருக்கு நெருக்கமாக இருந்தவர்களின் கருத்துக்களின் அடிப்படையிலானவை என்றும் அவர் தெரிவிக்கின்றார். அதற்காக அவர் வலிதான கருத்து ஒன்றையும் முன்வைக்கிறார். தான் உயிரோடு இருக்கும் வரையில் ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வு கிடைக்க இந்தியா விடமாட்டாது என்று தலைவர் நம்பினார் என்பதே அந்தக் காரணம்.

இதற்கும் மேலே ஜெகத் புஸ்பாரின் பேட்டிகளில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் ஒன்று உள்ளது. ஈழத் தமிழர்கள் மிக உன்னிப்பாகக் கவனித்துச் செயற்படவேண்டிய இடம் அதுதான் என்பது எனது எண்ணம்.

போர் முடிந்து, சண்டைக் களத்திலிருந்து பிரபாகரனும் விடுதலைப் புலிகளும் அகற்றப்பட்ட கடந்த 15 ஆண்டுகளில் ஈழத் தமிழர்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தர உலகம், இந்தியா, தமிழ்நாடு, புலம்பெயர் தமிழர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் தவறிவிட்டனர். அத்தகைய ஒரு தீர்வு கிடைப்பதற்கான அழுத்தம் இந்திய மத்திய அரசுக்கு தமிழ்நாட்டில் இருந்தே கிடைக்கவேண்டும். போர் நடந்துகொண்டிருந்தபோது சரியோ பிழையோ இந்த அழுத்தம் தமிழ்நாட்டிலிருந்து இருந்தது. திமுகவும் அதிமுகவும் ஈழத் தமிழர் பிரச்சினையை தமிழ்நாட்டின் முக்கிய அரசியல் பிரச்சினையாகக் கொதி நிலையில் வைத்திருந்தன. ஆனால் போரின் பின்னர் வந்த நாம் தமிழர் கட்சி, இவர்களையெல்லாம் துரோகிகளாக்கி உருமைகோரிய பின்னர் ஈழத்தமிழர் பிரச்சினையின் ஏகபோக முகவர்களாகத் தங்களை அறிமுகப்படுத்தினர். ஆனால், கடைசியில் ஈழத் தமிழர் பிரச்சினையை அவர்கள் நீர்த்துப் போகச் செய்துவிட்டனர். இலங்கையில் தமிழர்களுக்கு ஒரு தீர்வு வரவேண்டுமாக இருந்தால் அது இந்தியாவை மறீ வருவதற்குச் சாத்தியமில்லை. அப்படி ஒரு தீர்வுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டுமானால் தமிழ்நாடு இன்றி அது சாத்தியமாகாது. எனவே தமிழ்நாட்டில் இருந்த அந்த அழுத்தம் வழங்கப்படவேண்டும்.

தலைவர் பிரபாகரன் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து அடுத்த கட்டத்திற்கு ஈழத் தமிழர் அரசியலை நகர்த்தி அந்த மக்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தரவேண்டிய எழுச்சி தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்படவேண்டும். இந்தப் 15 ஆண்டுகளில் அது செய்யப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. இனியாவது அதனைச் செய்யவேண்டும் என்கிறார் ஜெகத் புஸ்பார்.

அவரது அந்தக் கருத்து மட்டுமாவது மிகச் சரியானதாகவே இருக்கின்றது. இந்தியாவை மீறி ஈழத் தமிழர்களுக்கு ஒரு தீர்வு கிடைப்பது சாத்தியமானது அல்ல. புதுடில்லியை எதிர்நிலையில் வைத்துக்கொண்டு தீர்வை எட்டிவிட முடியும் என்பதும் சாத்தியமற்றது. அதேநேரம் தீர்வு விடயத்தில் இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டுமானால் அதனைச் செய்விக்கக்கூடிய ஒரே தரப்பு தமிழ்நாடு மட்டும்தான். ஈழத் தமிழர்களின் அரசியலின் அடுத்த கட்டம் அங்கிருந்துதான் தொடங்கப்படவேண்டும். தமிழ்நாட்டுடனான ஈழத் தமிழர் முரண்கள் தீர்க்கப்பட்டு அங்குள்ள பிரதான கட்சிகள் அனைத்துடனும் மீண்டும் உறவுகள் புதுப்பிக்கப்பட்டு, தமிழ்நாட்டின் மைய அரசியல் நீரோட்டத்தில் ஈழத் தமிழர் பிரச்சினை மீண்டும் முக்கிய இடத்தைப் பிடிக்கவேண்டும். இப்போது அதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதே பொது வேட்பாளரை விடவும் வேகமாக முன்னெடுக்கப்படவேண்டிய பணி என்று எனக்குப்படுகின்றது. தலைமைவிட்டு விட்டு தும்பைப் பிடிக்கும் செயலை நிறுத்திவிட்டு ஆக்கபூர்வமாக, யதார்த்தமாக சிந்திக்கவேண்டியது இந்தத் தருணத்தில் அவசியம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேர்தல்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் ஒத்திவைப்பதானது. இலங்கையில் ஜனநாயகப் பற்றாக்குறையாகும். அதுமாத்திரமன்றி கடந்த 2022 ஆம் ஆண்டு உருவான 'அரகலய' என அறியப்படும் பாரிய மக்கள் எழுச்சியானது அரசாங்கம் மற்றும் அதன் அதிகாரிகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தியது.

மக்களின் நிராகரிப்புக்கு மத்தியில் ஆட்சியைப் பொறுப்பேற்றுக்கொண்ட ஜனாதிபதிக்கு ஜனநாயகக்கோட்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கும், மக்கள் இறையாண்மைக்கு மதிப்பளிப்பதற்குமான கடப்பாடு இருக்கின்றது.

இருப்பினும் அத்தகு ஜனாதிபதி 2023 இல் உள்ளுராட்சி மன்றத்தேர்தல்களை நடத்துவதைத் தாமதப்படுத்தினார். அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கு மாறாக ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு அரசியலமைப்புத்திருத்தமொன்று அவசியம். அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும், சர்வசன வாக்கெடுப்பின் மூலம் மக்களின் அனுமதியும் தேவை.

அத்தோடு பெரும்பான்மை மக்களால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட விடயத்தைக் கோருகின்ற பாலித்த ரங்கே பண்டாரவின் இக்கருத்து மிகவும் ஆபத்தானது இது அரசியலமைப்புக்கு முரணானது. நம்பகத்தன்மையைக் கேள்விக்குட்படுத்துகிறது. பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைத் தவறாகப் பயன்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

இலங்கையின் ஜனநாயகம் என்பது ஜனாதிபதித்தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களல் வாக்களிப்பதன் ஊடாக பொதுமக்கள் அவர்களது தலைவர்களின் கொள்கைகளை நிராகரிப்பதற்குக் கொண்டிருக்கும் இயலுமையிலேயே தங்கியிருக்கின்றது.

எனவே ஜனநாயகத்தைக் கேள்விக்குட்படுத்தக்கூடியவாறான இத்தகைய நடவடிக்கைகள் முற்றுமுழுதாக நிராகரிக்கப்படவேண்டும் என்றுள்ளது.

## டீசல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூத்திரத்திற்கு அமைய, இம்மாதம் வருடாந்த பஸ் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கமைய, பஸ்களுக்கான உதிரிப்பாகங்களின் விலை குறைவடைந்தமை, டீசல் விலை குறைவடைந்தமை உள்ளிட்ட 12 விடயங்களை கவனத்திற்கொண்டு பஸ் கட்டண திருத்தத்தை மேற்கொள்ளப்படவுள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து பஸ் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுவதாக அகில இலங்கை மனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும் முச்சக்கரவண்டிகளுக்கு கட்டண குறைப்பு மேற்கொள்ளப்பட மாட்டாதென முச்சக்கரவண்டி சாரதிகள் தொழிற்சங்கம் கூறியுள்ளது.

வாகன உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்பினால் தாமும் கட்டணக்குறைப்பை மேற்கொள்ளப் போவதில்லை என அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சங்கம் அறிவித்துள்ளது.

## சு.கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சி மீண்டும் உயிர் பெற்று முன்னோக்கி செல்ல ஆரம்பித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

கட்சிக்குள் நிலவும் பிளவுகள் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திசாநாயக்க,

சுதந்திர கட்சிக்குள் எவ்வித பிளவும் இல்லை. அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர். கட்சியின் மத்திய செயற்குழுவிற்கும் அதேபோன்று அனைத்து அமைப்பாளர்களுக்கும் நாளை அழைப்புவிடுத்துள்ளோம். சுதந்திரக் கட்சியின் உதவியுடனே எதிர்கால ஜனாதிபதி தீர்மானிக்கப்படுவார். சுதந்திரக் கட்சியின் தலையீட்டுடன், எமது தலைமையின் கீழ் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார் - என்றார்.

## ஆசியாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டச் செயலர் ஜே.ஜே.முரளிதரன், மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் ஏந்திரி சிவலிங்கம், வவுனியா போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சுகுணன், இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள ஆனந்தா சுவாமிகள் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது புத்தகத் திருவிழாவினைத் தொடக்க வைக்கும் வகையில் நூல்களை அன்பளிப்பு செய்யும் நிகழ்வு நடைபெற்றது. பெருமளவானோர் புத்தகங்களை அன்பளிப்பு செய்தனர்.

தொடர்ந்து இந்த உயரிய பணிக்கு அனைவரது ஒத்துழைப்பினையும் வழங்குமாறு மட்டக்களப்பு நூலக புத்தகவள ஒருங்கிணைப்புக் குழுவினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நூலகத்திற்கு மூன்று இலட்சம் நூல்களைப் பெறும்நோக்கில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் புலம் பெயர்ந்த மக்களையும் உதவுமாறு வேண்டுகோள்கள் முன் வைக்கப்பட்டன.

சிங்கள பேரினவாதிகளினால் யாழ். நூலகம் எரிக்கப்பட்ட சோகமான ஒரு நாளான நேற்று, நீங்கள் எதனை எரித்தாலும் பிழையான விடயங்கள் நிலைத்திருக்காது, சரியானவை சரியான இடத்தில் சேரும் என்பதை உணர்த்தும் வகையில் புதிய நூலகம் அமைக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் தெரிவித்தார்.

நாங்கள் திறப்பது புத்தகசாலை. அதனைத் திறப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள். பாடசாலைக் கல்வியை கற்று வைத்தியராகவும் பொறியியலாளராகவும் வருவது கல்வித்துறையின் அடிப்படை விடயம். கண்டுபிடிப்புகள் புதிய மாற்றங்கள் மூலம் அனைத்தையும் ஒருங்கிணைத்து பேரறிஞர்களை உருவாக்குவதுதான் புத்தகங்களின் பணியாகும். அந்த பணிக்கான அத்திபாரத்தினையே நாங்கள் இடுகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# பலஸ்தீனம் மீதான இனப்படுகொலையை நிறுத்தக்கோரி கவனவீர்ப்புப் போராட்டம்

## கொழும்பில் நடந்தது













பலஸ்தீனம் மீதான இனப்படுகொலை தாக்குதலை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தி சிவில் அமைப்பினர் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகத்தின் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (05)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் சிதைவுகள் மூன்று வருடங்களின் பின் மீட்கப்பட்டன



தீயில் எரிந்து கருகிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் சிதைவுகள் 03 வருடங்களின் பின்னர் பாணந்துறை கடற்பரப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

2021 மே மாதம் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பிடித்து எரிந்து கருகியபோது அதில் இருந்த இரசாயனங்கள் கடல் நீரில் கலந்தன.

இதனால் கடல் நீரும் சுற்றுச்சூழலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக, கடந்த காலங்களில் நாட்டில் பல்வேறு பகுதிகளில் உள்ள கடற்பரப்பில் ஆமைகள் உள்ளிட்ட ஏராளமான கடல்வாழ் உயிரினங்கள் இறந்து கரை ஒதுங்கின. அத்தோடு, மீனவர்களும், அப்பகுதி மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

அந்தக் கப்பலின் கொள்கலன்களில் இருந்த பொருள்களும் கொழும்பு உள்ளிட்ட கடற்கரை பகுதிகளில் கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது. (05)

# குருணாகலில் லொறி மோதி 82 வயது மூதாட்டி உயிரிழப்பு

குருணாகல் ,மதுராகொட பொலிஸ் பிரிவிற்குப்பட்ட குருணாகல் - மாத்தளை வீதியில் லிஹினிவெஹெர பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார் என மதுராகொட பொலிஸார் தெரிவித்தனர்.

குருணாகல் ,ரிதிகம பிரதேசத்தைச் சேர்ந்த 82 வயதுடைய மூதாட்டியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாத்தளையிலிருந்து குருணாகல் நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்தவர் ரிதிகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரது சடலம் ரிதிகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மதுராகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# பித்தர்களின் வசமாகி பெருநெருப்பு விழுங்கியதே !



ஏடுகளாய் இருந்தவற்றை எப்படியோ கண்டெடுத்து
நாடெல்லாம் நன்மைபெற நல்ல உள்ளம் விரும்பியாதால்
ஓடாக உழைத்து நிதம் உருப்படியாய் செய்தமையே
வாடாது நிற்கின்ற வகைவகையாம் நூல்களெலாம்

எத்தனையோர் உழைப்பினிலே இங்குவந்த புத்தகங்கள்
எத்தனையோ மேதைகளை எமக்களித்து நின்றதுவே
நித்தமும் நாம்படிப்பதற்கு புத்தகமாய் இருக்குமவை
எத்தனையோ சந்ததிக்கு இருக்கின்ற பொக்கிஷமாம்

நூல்நிலையம் இல்லையென்றால் நுண்ணறிவு வளராது
நூல்நிலையம் அருகிருந்தால் தேடிடலாம் அறிவையெலாம்
பாவலரும் நாவலரும் பலபேரும் உருவாக
நூல்நிலையம் காரணமாய் அமைந்ததனை அறிந்திடுவோம்

யாழ்ப்பாண நூலகத்தை யாருமே மறக்கார்கள்
வேண்டிய புத்தகத்தை விரைவுடனே தந்துநிற்கும்
தென்கிழக்கு ஆசியாவின் சிறந்தவொரு நூலகமாய்
சிறந்தோங்கி நின்றதனை தேசமே தானறியும்

எத்தனையோ வகையான புத்தகங்கள் இருந்ததங்கே
அத்தனையும் படிப்பவர்க்கு அருமருந்தாய் அமைந்தப்போ
சொத்தாக மதித்துமே புத்தகத்தைக் காத்தார்கள்
சுவையறியா அரக்கர்களோ சூறையாடி விட்டார்கள்

கற்றுணர்ந்தோர் வாழ்ந்தவிடம் கல்விக்கூடம் நிறைந்தவிடம்
கண்ணியத்தின் உறைவிடமாய் கருத்திலே நின்றவிடம்
பெற்றவர்கள் பிள்ளைகளை பெரிதாக்க நின்றவிடம்
பித்தர்களின் வெறியாலே அத்தனையும் பொசுங்கியதே

கோவிலுக்கு நிகராகக் கொண்டாடும் நூலகத்தை
கொடுங்கோலர் பலர் சேர்ந்து கொழுத்தியே விட்டார்கள்
தாவீது எனும்சாது தன்னளவில் தாங்காது
ஓய்வெடுத்து நின்றதுவே உலுத்தர்களின் செயலாலே



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அச்சம்

இலங்கையின் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின்மக்களாட்சிக்(ஜனநாயக)காவலர் என்கிற முகம் தொடர்ந்து கிழிக்கப்பட்டு வருகின்றது. மக்களாட்சிக்கு விரோதமாக அவர் ஆற்றும் பலவும் அவரால் மறைமுகமாக முன்னெடுக்கப்பட்டாலும் அவரது முற்போக்கான, செயல்திறனுள்ள, நாட்டுப்பற்றாளர் என்கிற முகங்களும் தொடர்ந்து கிழிந்துகொண்டே இருக்கின்றனர். ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னர் மக்களாட்சிக் காவலர்களாகவும் மக்களின் நண்பர்களாகவும் இருப்பவர்கள் அதிகாரம் பெற்றுவிட்டால் மக்கள் விரோதிகளாகிவிடும் இலங்கையின் கள யதார்த்தத்திற்கு ரணிலும் விதிவிலக்கல்ல என்பது மீண்டும் நிரூ–பிக்கப்பட்டுள்ளது.

அரசுத் தலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றை இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போடும் அவரது கட்சிச் செயலாளரது யோசனை இந்த வகையில் அவரது முகத்திரையை மேலும் கிழித்த கடைசிச் சம்பவமாகி இருக்கின்றது. சட்டத்தரணிகளின் கூட்டிணைவு வெளியிட்டுள்ள அறிக்கை இது பற்றி மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது.

”மக்களின் நிராகரிப்புக்கு மத்தியில் ஆட்சியைப் பொறுப்பேற்றுக்கொண்ட அரசுத் தலைவருக்கு மக்களாட்சிக்கோட்பாடுகளைஉறுதிப்படுத்துவதற்கும், மக்கள் இறையாண்மைக்கு மதிப்பளிப்பதற்குமான கடப்பாடு இருக்கின்றது.

இருப்பினும் அத்தகு அரசுத் தலைவர் 2023 இல் உள்ளுூராட்சி மன்றத்தேர்தல்களை நடத்துவதைத் தாமதப்படுத்தினார். அரசமைப்பின் பிரகாரம் அரசுத் தலைவரின் பதவிக் காலம் 5 வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு மாறாக அரசுத் தலைவரின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு இப்போது முயற்சிக்கப்படுகிறது. அவ்வாறு செய்வதற்குஅரசமைப்புத்திருத்தமொன்றுஅவசியம். அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும், சர்வசன வாக்கெடுப்பின் மூலம் மக்களின் அனுமதியும் தேவை.

அத்தோடு பெரும்பான்மை மக்களால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட விடயத்தைக் கோருகின்ற பாலித்த ரங்கே பண்டாரவின் தேர்தல் ஒத்திவைப்புக் கருத்து மிகவும் ஆபத்தானது. இது அரசமைப்புக்கு முரணானது. நம்பகத்தன்மையைக் கேள்விக்குட்படுத்துகிறது. நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைத் தவறாகப்பயன்படுத்தும்வகையில்அமைந்திருக்கிறது.

இலங்கையின் மக்களாட்சி என்பது ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் உள்ளுூராட்சி மன்றத்தேர்தல்களல் வாக்களிப்பதன் ஊடாக பொதுமக்கள் அவர்களது தலைவர்களின் கொள்கைகளை நிராகரிப்பதற்குக் கொண்டிருக்கும் இயலுமையிலேயே தங்கியிருக்கின்றது. எனவே மக்களாட்சியை கேள்விக்குட்படுத்தக்கூடியவாறான இத்தகைய நடவடிக்கைகள் முற்றுமுழுதாக நிராகரிக்கப்படவேண்டும்” என்று சட்டத்தரணிகள் கூட்டிணைவு வலியுறுத்தியுள்ளது.

பசுத் தோல் போர்த்திய புலி தான் என்பதை ரணில் மெல்ல மெல்ல வெளிப்படுத்தி வருகின்றார். பதவியில் தொடரவேண்டும் என்கிற அவரது ஆசை இந்த நாட்டை எங்கு கொண்டுபோய் நிறுத்துமோ என்பது மக்களிடம் இப்போதுள்ள அச்சம்.

# சுமந்திரன் மக்களிடம் இறங்கி வரவேண்டும்



கருணாகரன்

தமிழ்த்தேசிய அரசியலில் அநேகதாக எல்லா முடிவையும் எடுக்கும் ஆளாக இப்போது சுமந்திரன் வளர்ச்சியடைந்துள்ளாரா? அல்லது தமிழ்ச் சூழலில் அப்படியொரு நிலை உருவாகியுள்ளதா? அல்லது அப்படிக் கருதப்படுகிறதா?

ஏனென்றால், தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான தீர்மானத்தை வெற்றியடைய வைப்பதற்கும் சுமந்திரன் தேவைப்படுகிறார். தமிழரசுக் கட்சியின் தலைவிதியைத் தீர்மானிப்பதற்கும் சுமந்திரனே தேவையாக இருகக்கிறார். ஜனாதிபதித் தேர்தல் உட்பட அனைத்துத் தேர்தல்களையும் கையாள்வது, பதவியில் இருக்கும் ஆட்சியாளர்களோடு தொடர்புகளைப் பேணுவது, அவர்களைக் கையாள்வது, வெளிநாட்டுப் பிரதிநிதிகளோடு பேசுவது, முஸ்லிமரோடு அரசியல் உறவைக் கொண்டிருப்பது எனச் சகலவற்றிலும் சுமந்திரனின் அடையாளமும் முன்னணிப்பாத்திரமுமே உள்ளது.



### இதை மேலும் விரிவாகப் பார்க்கலாம்

சிலருடைய ஆர்வக்கோளாறினால் விளையாட்டாகத் தொடங்கப்பட்ட "தமிழ்ப்பொது வேட்பாளர்" விடயம் இப்பொழுது விடவும் முடியாது. தொடவும் முடியாத என்ற நிலைக்குள்ளாகியுள்ளது. இருந்தாலும் எப்படியாவது இதை வெற்றியடைய வைக்க வேண்டும் எனச் சிலர் தலையைக் கொடுத்து இரவு பகலாக வேலைசெய்கிறார்கள். இதனால் இந்த "விடாமுயற்சி விக்கிரமாதித்தியன்"களான "சிவில் சமூகப் பிரமுகர்கள்" கூடச் சில நாட்களுக்கு முன்பு சுமந்திரனைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

உண்மையில் சுமந்திரனுடன் சந்திப்பைச் செய்வதற்கு இவர்களில் எவருக்கும் உடன்பாடில்லை. ஆனாலும் அதைவிட்டால் வேறு வழியில்லை என்ற நிலையிலேயே இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

இதற்கான தூண்டலைச் செய்தவர் வடமாகாணசபையின் முன்னாள் அமைச்சர்களில் ஒருவர். அதைச் சிவில்பிரமுகர்களால் தவிர்க்க முடியாமல்போய் விட்டது.

"சுமந்திரனைச் சமாதானப்படுத்தி (ஊழளெைஉந பண்ணி)னால்தான் தமிழரசுக் கட்சி, பொதுவேட்பாளர் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவளிக்கும். தமிழரசுக் கட்சி ஆதரவளித்தால்தான், ஏனைய கட்சிகளெல்லாம் இதை ஆதரிக்கும். இதைத் தவிர்த்து விக்கினேஸ்வரனோ சுரேஸ் பிரேமச்சந்திரனோ சிவில்பிரதிநிதிகளோ இந்த விடயத்தில் தனியே எதையும் செய்ய முடியாது என்றாகி விட்டது. ஆகவே நீங்கள் தலையைப் பிடிக்க வேணும். தலையைப் பிடித்தால்தான் வால்களெல்லாம் கட்டுப்பாட்டுக்கு வரும்" என்று சொல்லியிருக்கிறார் அந்த முன்னாள் அமைச்சர். எனவே உலகமெல்லாம் சுற்றி வருவதை விடவும் சுமந்திரனைப் பிடித்தால் போதும் என்ற கட்டத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது.

சந்திப்பின்போது "பொதுவேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும்? அதற்கான அவசரமென்ன?" என்றொரு சாதாரண கேள்வியைத் தூக்கிப்போட்டிருக்கிறார் சுமந்திரன். சென்றவர்கள் கொஞ்சம் ஆடிப்போய் விட்டார்கள். இருந்தாலும் "இந்தத் தேர்தலில் போட்டியிடும் முன்னிலை வேட்பாளர்கள் எல்லோரும் சிங்களவர்கள். இவர்களில் எவரும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரக்கூடியவர்களில்லை. அதைப்பற்றிப் பேசவே தயங்குகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வாக்களிப்பதை விட, இந்தத் தேர்தலை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, சிதறுண்டிருக்கும் தமிழ்த் தரப்பையெல்லாம் ஒன்றாகக் கொண்டு வரலாம். தமிழ் மக்களுடைய நிலைப்பாட்டை தென்னிலங்கைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தெரியப்படுத்த முடியும். இது இன்றைய சூழலில் அவசியமானது." என்று சொன்னார்கள்.

இதற்குப் பதிலளித்த சுமந்திரன், "தேர்தல் இன்னும் அறிவிக்கப்படவில்லை. யார் யாரெல்லாம் போட்டியிடுவார்கள் என்று கூட இன்னும் உறுதியாகவில்லை. போட்டியிடும் தரப்பிலிருந்து தேர்தல் விஞ்ஞாபனங்களும் வரவில்லை. அதற்குள் எதற்கு இந்த அவசரமெல்லாம்? இப்போதுள்ள சூழலில் எல்லோரையும் நாம் சமனிலையில் வைத்தே பார்க்கிறோம். இறுதி தீர்மானத்தை எடுப்பதற்கு முன்பு இதைப்பற்றி மக்களுடன் கலந்தாலோசிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்.

சிவில் சமூகப் பிரதிநிதிகளால் சுமந்திரனை எந்த நிலையிலும் வழிக்குக் கொண்டுவர முடியவில்லை. இறுதியில் "இதைப்பற்றி நாம் தொடர்ந்து விவாதிப்போம். அதற்குரிய ஏற்பாட்டைச் செய்கிறேன்" என்று சுமந்திரனே தொடர்ந்து கொண்டிருந்த தடுமாற்றத்துக்கு ஒரு முடிவைச் சொல்லி அனுப்பிவைத்தார்.

சுமந்திரன் சொன்னதைப்போல அடுத்துவரும் ஜூன் 09 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழ்ப்பொதுவேட்பாளர் பற்றிய பொதுவிவாதம் நடைபெறவுள்ளது. இந்த அறிவிப்பையும் சுமந்திரனே விடுத்துள்ளார். இதற்கிடையில் தமக்குச் சாதகமானவகையில் சிவில் அணியினர் வணிகர் கழகம், கூட்டுறவுச் சபை என ஓடியோடி பல்வேறு தரப்பினர்களையும் சந்திந்து ஆதரவு கோரிவருகின்றனர். இப்படியான உசாரோடு மக்களுக்கான வேலையைக் களத்திலிறங்கிச் செய்திருந்தால், தமிழ்ச்சமூகம் இன்று கொஞ்சமாவது முன்னேற்றத்தைக் கண்டிருக்கும். பல பிரச்சினைகளுக்குத் தீர்வையும் எட்டியிருக்கலாம். நாட்டை விட்டு வெளியேறுவோரின் தொகையும் கணிசமாகக் குறைந்திருக்கும். இவர்களுடைய சொல்லுக்கும் பெறுமதி கிடைத்திருக்கும். இப்படி ஆட்பிடிப்பதற்கு ஆதரவு சேர்ப்பதற்குமாக அலைந்து திரிய வேண்டி வந்திருக்காது. பொதுவேட்பாளரைப்பற்றிய பொதுவிவாதத்தின்போது இவ்வாறான விசயங்கள் எல்லாம் பேசப்படவும் கூடும்.

எனவே ஒரு விடயம் மிகத் தெளிவாகியுள்ளது. தமிழ்த் தேசியப் பரப்பில், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைத் தவிர்த்தால், சுமந்திரன்தான் எதையும் தீர்மானிப்பவராக இருக்கிறார் என. சுமந்திரனை மீறித் தமிழரசுக் கட்சியினாலும் எந்த முடிவுக்கும் செல்ல முடியாது. அதனுடைய புதிய தலைவர் தெரிவு உட்பட கட்சியின் அத்தனை நடவடிக்கைகளும் இன்று சுமந்திரனில்தான் தங்கியுள்ளன. இது சற்று மிகைப்படுத்தப்பட்ட கூற்று எனச் சுமந்திரனே இதனை மறுக்கலாம். ஆனால், உண்மை என்னவென்று எல்லோருக்கும் தெரியும். என்பதால்தான் சுமந்திரனிடம் பொதுவேட்பாளருக்கான அணி பகிரங்கமாகச் சரணடைந்திருக்கிறது. ஆனால், சுமந்திரனோ பொதுவேட்பாளர் என்ற நிலைப்பாட்டுக்கு எதிரானவர். அதை அவர் பகிரங்கமாகவே சொல்லியும் வருகிறார்.

இதனால் உண்டாகக் கூடிய அரசியல் சாதக - பாதக அம்சங்களையும் சுமந்திரன் அறிவார்.

(10ஆம் பக்கம் பார்க்க...)

# சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டுள்ள 20 ஆயிரம் சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 20 ஆயிரம் சிகரெட்டுகளுடன் சந்தேக நபரொருவர் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவிற்குப்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 20 ஆயிரம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# கண்டாவளையில் 5 வயதுக்குப்பட்ட சிறாருக்குப் போசாக்கு குறைபாடு

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் ஐந்து வயதுக்குப்பட்ட அதிகமான சிறுவர்களிடையே போசாக்கு குறைபாடு காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் போசாக்கு குறைபாடான சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினரின் கண்டாவளை பிரதேச கள விஜயத்தின் மூலம் 160 இற்கும் மேற்பட்ட சிறார்கள் போசாக்கு குறைபாடுகளுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

அப்பிரதேசங்களில் வசிப்பவர்களின் வறுமை, தொழிலற்ற நிலை என்பனவே போசாக்குக் குறைபாடுகளுக்குக் காரணங்களாக அமைந்துள்ளன.

அத்துடன், இப்பிரதேசத்தில் இவ்வாண்டில் சுமார் 6 இள வயது கர்ப்பங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன எனக் கூறப்படுகிறது.(05)

# பஸ் மோதியதில் வயோதிபர் பொலன்னறுவையில் இறப்பு

பொலன்னறுவை பொலிஸ் பிரிவிற்குப்பட்ட ஹபரனை - மட்டக்களப்பு வீதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலன்னறுவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவை, ஜயந்திபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 79 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரத்திலிருந்து கந்துருவெல நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர் பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் பொலன்னறுவை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலன்னறுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருகைதர உள்ளார்



மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் மூசா ஜமீர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜூன் 03 ஆம் திகதி முதல் 06 ஆம் திகதி வரை இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இதன்போது, மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவரது தூதுக்குழுவினர் து வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடனும் உத்தியோகபூர்வ இருதரப்பு கலந்துரையாடல்களையும் மேற்கொள்வார்கள்.(05)

# விக்டோரியா நீர்த்தேக்கத்தில் இரு சடலங்கள் மீகப்பட்டன

*கண்டி, தெல்தெனிய பொலிஸ் பிரிவிற்குப்பட்ட விக்டோரியா நீர்த்தேக்கத்தில் மிதந்த நிலையில் இரண்டு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என தெல்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.*

*உயிரிழந்தவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் கண்டறியப்படாத நிலையில், ஒருவர் 20 முதல் 25 வயதுக்குப்பட்டவர் எனவும் மற்றையவர் 30 முதல் 35 வயதுக்குப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*உயிரிழந்தவர்களது சடலங்கள் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கோணேச்சர ஆலயத்தின் புனிதத்தையும் அபிவிருத்தியையும் பேண கிழக்கு ஆளுநர் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஆறு.திருமுருகன் கோரிக்கை



திருக்கோணேச்சர புனிதத்தையும் அபிவிருத்தியையும் பேணுவதில் கிழக்கு மாகாண ஆளுநர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

திருக்கோணேச்சர புனிதத்தையும் அபிவிருத்தியையும் பேணுவதில் கிழக்கு மாகாண ஆளுநர் உடன் அக்கறை எடுத்தல் வேண்டும்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சைவத் தமிழர்களின் தலையாய கோவிலாகிய திருக்கோணேச்சரத்தைப் பாதுகாப்பதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

திருக்கோணேச்சரத்துக்கு செல்லும் பாதையில் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள பெட்டிக் கடைகளை அவ்விடத்தில் இருந்து நீக்கி அவர்களுக்கு மாற்று ஒழுங்கு செய்யவும். கோணேச்சரத்துக்கு செல்லும் பக்தர்களின் புனித வழிபாட்டுக்கு உரிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

திருக்கோணேச்சர இடையூறுகளைச் திருப்பணிக்கு தொல்லியல் திணைக்களம் பல்வேறு செய்து வந்துள்ளது. இந்த இடையூறுகளை நிறுத்தி திருக்கோணேச்சரத்தின் பாரிய திருப்பணிகளை முன்னெடுப்பதற்கு ஏற்பாடு செய்து உதவுங்கள்.

திருக்கோணேச்சர புனித தீர்த்தமாகிய பாபநாசம் தீர்த்தக்கரையை புனருத்தாரணம் செய்து பொதுமக்கள் அவ்விடத்தில் தமது கடமைகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

திருக்கேதீச்சர ஆலயத்தை இந்திய அரசு கருங்கற் கோயிலாக புனர்நிர்மாணம் செய்தது போல் திருக்கோணேச்சரத்தையும் அழகாக நிர்மானிப்பதற்கு இந்திய அரசிடம் வேண்டுதல் விடுவிக்கப்பட்டது. அவர்கள் அக்கறையாக இருப்பதாக தகவல்கள் திரட்டினார்கள் ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேற்படி விடயங்கள் தொடர்பாக மதிப்பார்ந்த ஆளுநர் துரித நடவடிக்கை எடுத்து உதவுமாறு நன்றியோடு வேண்டுகிறோம். - என்றுள்ளது. (05)

# யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு அமைச்சர் டக்ளஸ் திடீர் வருகை





யாழ்.மத்திய பஸ் நிலைய பகுதியில் உரிய அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களால் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை அகற்றித் தருமாறு பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை திடீர் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

இதன்போது அங்கு காணப்படும் அசுத்தமான சூழலை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தியதுடன், இலங்கை போக்குவரத்து சபையின் பிராந்திய பணிப்பாளருடனும் தொடர்பு கொண்டு நிலைமைகள் தொடர்பாக பிரஸ்தாபித்தார். (05)




## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சவக்காலைப் பகுதிக்கு அழைத்து வந்துள்ளார்.

இருவருக்கும் பிரச் சினை ஏற்பட்ட நிலையில் குறித்த ஆண், பெண் மீது தலையில் பெற்றோல் ஊற்றி தீ மூட்டியுள்ளார்.

பெண் தீயில் எரிவதைக் கண்ட அயலவர்கள் ஓடிச் சென்று தீயை அணைத்து பெண்ணை காப்பாற்றி யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவத்தில் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் ஆண் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துண்டுபிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

## உரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம்தான் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியும்.

இதற்கிடையில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை 2 வருடங்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மாறுபட்ட கருத்துகளுக்கு ஜனாதிபதி உரிய பதில்களை வழங்காத உள்ளபோது தேர்தல்கள் எவ்வாறு நடக்கும் என பொதுமக்களும் குழம்பிப்போய் இருக்கின்றனர்; ஒரு ஜனநாயக நாட்டில் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு தேர்தல்களை நடத்தி மக்களின் ஆணையை பெற வேண்டும். அவ்வாறு நடைபெறாமல் விட்டால் அவர்கள் ஜனநாயக மக்கள் விரோதிகள் ஆவார். எங்களது கட்சியின் நிலைப்பாடு உரிய காலத்தில் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்பதுதான் - என்றார்.

## கடைக்குச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குட்டையில் அவர்கள் இருவரது சடலங்களையும் அவதானித்துள்ளனர். இருவரும் துவிச்சக்கர வண்டியுடன் தவறுதலாக குட்டையில் விழித்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்நிலையில் அவர்கள் இருவரது சடலங்களும் உடற்கூறாய்வுகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது. இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாவின் மிக பெரிய நூலகமாகத் திகழ்ந்த யாழ். பொது நூலகம் 1981 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி சிங்களக் காடையர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

## உரிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுசன வாக்கெடுப்பின் ஊடாக மக்களின் அனுமதியும் அவசியமாகும். மாறாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையின்றி அவ்வாறானதோர் திருத்த முன்மொழிவை மக்கள் வாக்கெடுப்புக்குக் கொண்டுசெல்லமுடியாது.

அதுமாத்திரமன்றி 1982 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற ஒரேயொரு பொதுசன வாக்கெடுப்பின் ஊடாக பாராளுமன்றத்தின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டமையின் மூலம் எமது நாடு மிகமோசமான அழிவை நோக்கிக் கொண்டுசெல்லப்பட்ட வரலாற்றை மறந்துவிடக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




காலைக்கதிர் Kalaikkathir

# பிரித்தானிய அரசியலில் ஈழத் தமிழ்ப் பெண்கள்





பிரித்தானியாவில் ஈழத் தமிழர்களின் அரசியல் செல்வாக்கு அதிகரித்து வரும் நிலையில், ஈழத் தமிழ் பெண்ணொருவர் லேபர் கட்சியின் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், உமா குமரன் என்னும் பெண்மணியே இவ்வாறு வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள தொகுதியானது லேபர் கட்சி ஆட்சிக்கு வருவதற்கு அதிக வெற்றிவாய்ப்புக்களை கொடுக்கும் தொகுதியாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் காரணமாக உமா குமரனுக்கு அதிக வெற்றி வாய்ப்புக்கள் இருப்பதாகவும், எதிர்வரும் ஜுலை மாதம் நான்காம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் வெற்றிப்பெற்று நாடாளுமன்றம் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள உமா குமரனுக்கு கடந்த மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தின் போது பாப்பரசர் பிரான்ஸிஸை சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்ததுள்ளது.

அத்தோடு தங்கம் டெபோனையர் எனும் தமிழ் பெண்ணொருவரும் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு இவர் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினராக இதற்கு முன்னரும் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில் இம்முறை இவர் வெற்றியீட்டுவாராயின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக வருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவரும் ஈழத் தமிழ் பூர்வீகத்தைக் கொண்டவர் என்பதுடன் லேபர் கட்சியின் முக்கியஸ்தராகவும் திகழ்வதுடன் இவர் கெபினட் அந்தஸ்துள்ள மந்திரியாக வருவது ஈழத் தமிழர்களின் அரசியல் நகர்வுக்கு மிகப் பெரிய பலமாகவும், வலுச் சேர்க்கும் ஒன்றாகவும் இருக்கும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (05)

# கலைப் பிரிவில் மாவட்டத்தில் முதலிடம் பண்டத்தரிப்பு மகளிர் மாணவி சாதனை





2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் வஜினா பாலகிருஷ்ணன் யாழ். மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும், நாடளாவிய ரீதியில் 32 இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இது தொடர்பாக அந்த மாணவி கருத்து தெரிவிக்கையில் -

எனது தந்தை ஒரு மீன் வியாபாரி. நான் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்று, 2023 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு கலைப்பிரிவில் தோற்றினேன்.

கலைப்பிரிவில் தமிழ், நாடகவியல் மற்றும் புவியியல் ஆகிய பாடங்களுக்கு 3 ஏ சித்திகளை பெற்றுள்ளேன். நான் சாந்தை கிராமத்தில் வசிக்கிறேன்.

எமது கிராமம் ஒரு பின்தங்கிய கிராமம். எமது கிராமத்தில் இருந்து யாழ்ப்பாண ரீதியில் சாதிக்க வேண்டும் என்பதே எனது கனவு. அதனை நிறைவேற்றியுள்ளேன்.

அன்றன்று கற்கின்ற விடயங்களை அன்றே வீட்டில் சென்று படிப்பதால் கஷ்டம் இல்லாமல் இலகுவாக படிக்க முடியும். ஆசிரியர்கள் கற்பிக்கும் போது கவனத்தை சிதறவிடாமல் கற்க வேண்டும். தமிழ் பாட விரிவுரையாளராக வர வேண்டும் என்பது தான் எனது கனவு. என்னை இந்த நிலைக்கு உருவாக்கிய பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். - என்றார். குறித்த மாணவியின் வெற்றியை கொண்டாடுவதற்கு அந்த ஊர் மக்கள் அனைவரும் அவரது வீட்டில் குழுமியிருந்தமை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (05)

# 38 லட்சத்து 40 ஆயிரம் ஷருபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் வர்த்தகர் கைது

*சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 38 லட்சத்து 40 ஆயிரம் ஷருபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வெள்ளிகிழமை கைது செய்யபப்பட்டுள்ளார்.*

*நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய வர்த்தகரொருவரே இவ்வாறு கைது செய்யப்பப்பட்டுள்ளார்.*

*இவர் வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் டுபாயிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.*

*இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இவர் கொண்டுவந்த பயணப்பொதியிலிருந்து 38,400 சிகரெட்டுகள் அடங்கிய 192 சிகரெட்டு காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனையடுத்து, சந்தேக நபரான வர்த்தகர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜராகுமாறு கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)*

# யாழ். மாவட்டத்தில் கணிதப் பிரிவில் முதலிடம் பெற்று மாணவன் சாதனை



க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணித பிரிவில் யாழ். மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று மாணவன் மதியழகன் டினோஜன் சாதனை படைத்துள்ளார்.

2023ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெள்ளிக்கிழமை வெளியாகியுள்ளன.

இந்நிலையில், குறித்த மாணவன் கணித பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடமும், அகில இலங்கை ரீதியில் 47 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

அத்தோடு யாழ்.மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவனான ம. டினோஜன் பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, 2023ஆம் ஆண்டிற்கான க.பொ.த உயர்தர பரீட்சை கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்றிருந்த நிலையில் 346,976 பரீட்சாத்திகள் நாடு முழுவதிலுமிருந்து தோற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# குஜராத் விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் மத தீவிரவாதிகள் அல்லர் என்கிறார் கமால் குணரட்ண



இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இலங்கையர்கள் நால்வரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் மததீவிரவாதிகள் இல்லை என பாதுகாப்பு அமைச்சின் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

இது குறித்து முழுமையான விசாரணைகள் இடம்பெறுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து எங்களின் புலனாய்வு பிரிவினர் எச்சரிக்கையுடன் உள்ளனர் எனத் தெரிவித்துள்ள அவர் இந்தியாவிற்கு சென்ற நான்கு இலங்கையர்கள் குறித்து முழுமையான விசாரணைகள் இடம்பெறுகின்றன. அவர்களின் சகாக்கள் கூட விசாரிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

தொடரும் விசாரணைகள் குறித்து என்னால் கருத்து தெரிவிக்க முடியாது. ஆனால் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுள்ள நால்வரும் மததீவிரவாதிகள் அல்லர். அவர்கள் போதைப்பொருளிற்கு அடிமையானவர்கள் என தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து கிடைத்த தகவலின்அடிப்படையில் விசாரணைகள் இடம்பெறுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு செயலாளர் என்ற அடிப்படையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாது நாங்கள் எங்கள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வுடன் உள்ளோம் என்பதை பொதுமக்களிற்கு உறுதியாக தெரிவிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# யாழில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் படுகாயம்

*யாழ்ப்பாணம் - வடமராட்சி, உடுப்பிட்டி பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.*

*இந்த சம்பவம் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.*

*உடுப்பிட்டி பகுதியை சேர்ந்த இறைச்சிக் கோழி வியாபாரம் செய்யும் 42 வயதுடையவரே தாக்குதலில் படுகாயமடைந்துள்ளார்.*

*இவர் வியாபாரம் முடித்துவிட்டு அதிகாலையில் தனது வீட்டிற்கு சென்ற வழியில் பதுங்கியிருந்த இனந்தெரியாத சந்தேகநபர்களால் தாக்கப்பட்டுள்ளார்.*

*இந்நிலையில், இவர் சத்தம் கேட்ட போது அவரது மனைவி வீட்டிற்கு வெளியே ஓடி வந்துள்ள வேளை மனைவியையும் தாக்கி அவரிடம் இருந்த தங்க நகைகளையும் கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.*

*சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)*

# 16 வயது மாணவி துஷ்பிரயோகம் பாடசாலை அதிபர் கைதாகினார்

*நிக்கவரெட்டிய, கபல்லாவ பிரதேசத்தில் 16 வயது மாணவி ஒருவரை பாலியல் துஷ்பியோகம் செய்த குற்றச்சாட்டில் பாடசாலை அதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என நிக்கவரெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.*

*சந்தேக நபரான பாடசாலை அதிபர் இந்த மாணவியை காரில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.இந்நிலையில், சந்தேக நபரான பாடசாலை அதிபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் நிக்கவரெட்டிய நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவி நிக்கவரெட்டிய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)*

காலைக்கதிர் Kalaikkathir

# சுமந்திரன் மக்களிடம்......



இருந்தாலும் ஜனநாயக அடிப்படையில் இதைப்பற்றிய விவாதமொன்றுக்கு அவர் முன் வந்திருப்பது பாராட்டுக்குரியது. இதுதான் சுமந்திரனின் இயல்பும் சிறப்புமாகும். பொதுச் சூழல் என்னவாக உள்ளது? பொது அபிப்பிராயம் எப்படி இருக்கிறது என்றெல்லாம் பார்த்து, அதற்கேற்ற மாதிரிக் கதைக்காமல் (விழுந்த பக்கத்துக்குக் குறியைச் சுடாமல்) எது சரியாக இருக்கிறதோ, தான் எதைச் சரியென நம்புகிறாரோ அதைத் துணிந்துரைப்பதே சுமந்திரனின் வழமை. இதனால்தான் அவர் யாழ்ப்பாணத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், "யாரும் என்னைத் துரோகி என்று சொல்வார்கள் என்பதற்காக என்னுடைய கருத்தைச் சொல்லாமல் விட மாட்டேன். என்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள மாட்டேன்" என்று சொன்னதுமாகும்.

அரசியலில் எப்போதும் சரியான பார்வையும் அதை முன்னெடுக்கக்கூடிய துணிவும் அவசியமானவை. இவையிரண்டும் இல்லையென்றால், எத்தகைய மகத்தான கருத்தும் (கொள்கையும்) பயனற்றதாகி - பெறுமதியற்றதாகி - விடும். யாரும் மிகச் சிறந்த அறிவாளிகளாக இருக்கலாம். ஆனால், அந்த அறிவைச் செயலாக்கக் கூடிய ஆற்றலும் ஆளுமையும் வேண்டும். கூடவே சமகாலத்தன்மை மிக அவசியமானது.

சுமந்திரன் சமகாலத்தன்மைக்கு நெருக்கமானவர். அவர் முன்னெடுக்க முயற்சிப்பது, சமகால அரசியல் (Contemporary Politics). இதற்குக் காரணம், அவர் ஒரு நவீனத்துவவாதி(Modernist) யாக இருப்பதாகும். அவருடைய அரசியற் தன்மை, ஏறக்குறைய நவீனத்தன்மைக்குரியது (Modern politics). எவரோடும் உரையாடக் கூடியது. இது முக்கியமான ஒன்று. நம்மிடம் எவ்வளவு சரிகள், நியாயங்கள் இருக்கிறது என்பது முக்கியமல்ல, எதிரே உள்ளவர்கள் அதை எப்படிப் பார்க்கிறார்கள்? எந்தளவுக்கு ஏற்றுக் கொள்கிறார்கள்? என்பதே முக்கியமானது. ஒரு கவிதையில் உள்ளதைப்போல, "என்னுடைய சொற்களுக்கு எதிராளியின் மனதில் இன்னோர் அர்த்தம் உள்ளது" என்பதை ஆழ்ந்து புரிந்து கொள்வது அவசியமானது. இந்தப் புரிதலின்மையினால்தான் தமிழ்ச் சமூகத்தின் மாபெரும் தியாகங்களும் பேரிழப்புகளும் பயனற்றவை என்ற நிலைக்கு வந்தது.

சமகாலத்தன்மையைக் கொண்ட எவரும் நவீனத்துவவாதிகளாகவே இருப்பர். அதைப்போல நவீனத்துவவாதிகள் சமகாலத்தன்மையோடு, எதிர்காலத்தைக்குறித்துத் தீர்க்கமாகச் சிந்திப்போராகவும் இருப்பர்.

இதை நாம் அரசியலில் மட்டுமல்ல, நடை, உடை, பாவனை உள்ளிட்ட அனைத்திலும் அவதானிக்க முடியும். இவர்களோடு சமூகத்துக்கு எப்போதும் ஒரு ஒவ்வாமை- முரண் - இருக்கும். சமனிலையில் சமூகத்தோடும் இவர்களுக்கு மறைமுகமாக ஒவ்வாமை - முரண் -காணப்படும். ஆனால், இவர்களுக்குப் பின்னால்தான் சமூகம் தன்னை மெல்ல மெல்ல ஒழுங்கமைத்துச் செல்வது. மாற்றம் இவ்வாறானவர்களாலேயே நிகழ்வது. இதனால் இவர்களே வரலாற்றில் முன்னோடிகளாகக் கருதப்படுகிறார்கள். முன்னோடிகளின் காலில் முள் குத்தியே தீரும். அவர்கள் நடப்பது புதிய பாதை அல்லவா!

இதற்கு மாறாக ஒருசாரார் உள்ளனர். தங்களுடைய கைகளில் அப்பிள் (யுிடந ஆழடிடைநிழழநெ) கைபேசியை வைத்திருப்பார்கள். நவநாகரீகமாக உடுத்திக் கொள்வார்கள். பிள்ளைகளைப் புதிய - நவீன துறைகளில் படிப்பிப்பார்கள். நவீனமாக வீட்டைக் கட்டுவார்கள், புதிய ஆழனநட வாகனங்களை, புத்தம் புதிய பொருட்களையெல்லாம் வாங்கிக் கொள்வார்கள். ஆனால், அவர்களுடைய சிந்தனையும் நடைமுறையும் கடந்த காலத்துள் - இறந்த காலத்துள் - புதையுண்டிருக்கும். அவர்கள் அடிப்படையில் இறந்தகால மனிதர்களே (Dead people).

ஆனால், சுமந்திரனுக்கு எப்போதும் இந்தத் தருணம் (வுாளை ளை வாந ழுஉஉயளழைn) முக்கியமானது. அதையும் விட முக்கியமானது எதிர்காலமாகும். அதைப்பற்றியே அவர் சிந்திக்கிறார். அவருடைய நேர்காணல்கள், உரைகள், அணுகுமுறைகள், நவடிக்கைகளில் இதை அவதானிக்க முடியும். ஒப்பீட்டளவில் அவர் கூடியபட்சமான ஜனநாயகவாதி. இதனால்தான் அவர் முஸ்லிம்களோடும் நெருக்கமாக - அவர்கள் நெருங்கக் கூடிய ஒருவராக இருக்கிறார். தமிழ்த்தேசியப் பரப்பில் சுமந்திரன் அளவுக்கு முஸ்லிம்களோடு நெருக்கமான தலைவர்கள் குறைவு. இன்னொருவர் சம்மந்தன். இதைப்போல சிங்களப் பரப்பிலும் மலையக மக்களோடும் சுமந்திரனுக்கு ஊடாட்ட உறவுண்டு. நாடாவிய பிரச்சினைகளில் அவர் காட்டுகின்ற ஆர்வமும் அவற்றில் சுமந்திரன் நிகழ்த்துகின்ற இடையீடுகள், தலையீடுகளும் அவருக்கான பரந்த அறிமுகத்தையும் முக்கியத்துவத்தையும் அதிகரித்திருக்கின்றன. (இருந்தாலும் பல சந்தர்ப்பங்களில் சுமந்திரனும் சம்மந்தனும் தனிப்பட நடந்து கொள்ளும் விதம் ஒரு அரசியற் தலைவர்களுக்குரியதாக இருப்பதில்லை. குறிப்பாக பலரையும் இணைத்துப் பயணிக்கும் பொறுமையும் நிதானமும் இருவரிடத்திலும் குறைந்தே உள்ளது. இது பெருங்குறைபாடாகும்).

சுமந்திரனுடைய தமிழரசுக் கட்சியோ கடந்தகாலம் - சமகாலம் என இரண்டிலும் அல்லாடிக் கொண்டிருப்பது. இந்த இழுபறியும் மோதலுமே சிறிதரன் - சுமந்திரன் அணி மோதல்கூட. சிறிதரன் கடந்த காலத்தின் அடைக்கோழியாகவும் சுமந்திரன் புதிய காலத்துக்கான குஞ்சுப் பறவையாகவும் உள்ளார். ஆயினும் இதுதான் அவருக்கு உள்ளூரில் எதிர்ப்பையும் வெளியே கவர்ச்சியையும் கொடுக்கிறது.

தமிழ்த்தேசிய அரசியற்பரப்பிலுள்ள பலரும் அறிந்தோ அறியாமலோ கடந்தகாலத்தில் உறைந்தவர்களாகவே (ழேளவயடபளைவ) உள்ளனர் அவர்களுக்கு அதொரு சுவையான இன்பம். அதொரு பொற்காலம். தங்க நினைவு. அவர்களுடைய அரசியலும்தான் அப்படியிருக்கும். ஆனால் சொந்த வாழ்க்கையோ சமகாலத்தோடு - யுிடந ஆழடிடைந ிழநெ னோடு மிகத் தீவிரமாகப் பிணைந்திருக்கும். இந்த முரணைப் பற்றி அவர்கள் மனந்திறந்து ஒரு நிமிடம் யோசித்தால் போதும், நல் மாற்றங்கள் நிகழும்.

மிகச் சிலரே இதைக் கடந்தவர்கள். புதிய சகாப்தம் (ஆழளைபெ வைழ ய நெற நசய) ஒன்றுக்குச் செல்ல வேண்டுமானால், இறந்தகாலத்திலிருந்து மீண்டெழ (சுநளரசபநஉந கசழஅ னநயன-நனெ ிழடவைஉள) வேண்டும். அரசியல் அர்த்தத்தில் சொல்வதானால், கடந்தகாலப் படிப்பினைகளிலிருந்து பெற்றுக் கொண்ட அறிவைக் கொண்டு நிகழ்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அதிலிருந்து எதிர்காலத்தை மேம்படுத்த முடியும். அதற்கு இந்தத் தருணத்தை- இந்தச் சந்தர்ப்பத்தை - இந்தக் காலத்தைச் சரியாக, உரிய முறையில் விளங்கிச் செயற்பட வேண்டும். அதாவது தன்னுடைய காலமாக உணர்தல் -ீநச- உநிவழைெ ை ாளை ழறெ வைஅந. அப்படிச் சிந்தித்தால்தான் கிடைத்த வாய்ப்பைத் தன்னுடையதாக (வுயமைபெ ாளை உாயஉெந) மாற்றிக் கொள்ள முடியும். ஏறக்குறைய சுமந்திரன் அப்படிச் சிந்திக்கிறார் என்றே தெரிகிறது. என்பதால்தான் தன்னால் இந்தக் காலத்தை மாற்ற முடியும் என அவரால் நம்ப முடிகிறது. ஆனால், அதற்கு நிறைய வேலை செய்ய வேண்டும். அதைத் தனியே செய்ய முடியாது. அதற்கான ஆளணி, கட்டமைப்புகள், செயற்றிட்டங்கள், மக்கள் இணைப்புகள், அர்ப்பணிப்பான உழைப்பு எனப் பலவும் தேவை. அதற்கான பயிற்சியை - முயற்சியை அவர் எடுக்க வேண்டும். முக்கியமாக மக்களுடனான உறவையும் அரசியற் பரப்பில் யதார்த்தமாகச் சிந்திக்கக் கூடிய தரப்புகளின் இணைவையும் சாத்தியப்படுத்த வேண்டும். இதுவரையில் சுமந்திரன் போட்டதெல்லாம் சிறு புள்ளியே. இனி அதை வளர்த்து ஒரு வடிவமாக்க வேண்டுமானால் அதற்கான வேலைகள் அவசியமாகும். எந்தச் சிறு வாய்ப்பையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் ஆற்றல் அவரிடம் உண்டு என்பதால், வாய்ப்புகளை உருவாக்கும் ஆற்றலையும் அவரால் வளர்த்துக் கொள்ள முடியும் என நம்புகிறேன். இதற்கு அவர் மக்களிடம் பல படிகள் இறங்கி வர வேண்டும். இல்லையென்றால் வரலாற்றின் தெரிவு இன்னொன்றாகி விடும்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் உரிமையாளர் கைது

குருணாகல் சுரதிஸ்ஸ மாவத்தையில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமொன்றின் உரிமையாளர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

அங்குச் சவுதி அரேபியா, ஓமன், குவைத் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆட்சேர்ப்பு செய்து வருவதும் தெரியவந்துள்ளது.

இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்திலிருந்து போலியான 110 கடவுச்சீட்டுகள், வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் மற்றும் பல ஆவணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெள்ளிக்கிழமை குருணாகல் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# நுவரெலியாவில் உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

நுவரெலியா - அம்பேவல பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் நபரொருவரை வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பேவல 7 ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் வீட்டில் துப்பாக்கி இருப்பதாக நுவரெலியா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய பொலிஸார் குறித்த வீட்டை சுற்றி வளைத்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டு வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை பொலிஸார் கைப்பற்றினர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின்னர் நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# மலையகத்தில் கடும் பனிமூட்டம் சாரதிகளுக்கு எச்சரிக்கை விடுப்பு



மலையகத்தில் பல பகுதிகளில் அதிக பனிமூட்டம் சூழ்ந்து காணப்படுகிறது. இதனால் சாரதிகள் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நுவரெலியா -- ஹற்றன் பிரதான வீதியில் பிலக்பூல் சந்தி , வெண்டிகோனர் , பங்களாஹத்த , நானுஓயா , ரதல்ல குறுக்கு வீதி, அதேபோன்று நுவரெலியா - கண்டி வீதியில் பம்பரக்கலை, டொப்பாஸ், குடாஓயா,லபுக்கலை, கொண்டக்கலை பாதை நுவரெலியா -உடபுசல்லாவ வீதியில் ஆவேலியா, பொரலந்த, கந்தப்பளை, இராகலை பாதை , நுவரெலியா -பதுளை- வீதியில் தர்மபால சந்தி, மாகாஸ்தோட்டகட்டுமான, சீத்தாஎலிய, ஹக்கலை மற்றும் பொரகாஸ் உட்பட அம்பேவல,மீப்பிலிமான ,பட்டிபொல மற்றும் உலக முடிவு வீதி போன்ற இடங்களில் வழமைக்கு மாறாக அதிகளவான பனி மூட்டம் காணப்படுகின்றது. இதனால் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.

நுவரெலியா - ஹற்றன் ஏ7 பிரதான வீதியில் சென்ற வாகனங்கள் அதிக ஒலி எழுப்பியவாறும், வாகன விளக்குகளை ஒளிரவிட்டும் செல்வதை அவதானிக்க முடிந்தது .

மேலும், தொடர்ந்து மழை பெய்வதால் அதிக குளிருடன் கூடிய காலநிலை காணப்படுகிறது.

குறிப்பாக சனி மற்றும் ஞாயிறு விடுமுறை நாள்களில் வெளி மாவட்டத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு வாகனங்களில் வருகை தந்துள்ளனர்.

எனவே, குறித்த சாரதிகளுக்கும் எதிரே வரும் வாகனங்கள் தெரியாதபடி கடும் பனிமூட்டம் நிலவுவதால் விபத்துக்களை தடுக்கும் நோக்கில் மிகவும் அவதானமாக தங்களது வாகனங்களை செலுத்த வேண்டும் எனவும், வாகனங்கள் செலுத்தும் போது தங்களுக்கு உரியதான பக்கத்தில் வாகனங்களின் முகப்பு விளக்குகளை ஒளிரச்செய்தவாறு வாகனங்களை செலுத்த வேண்டும் எனவும் நுவரெலியா போக்குவரத்து பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

(05)

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட் JRIDE

## TAXI APP FROM JAFFNA

இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

jride

JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play

Download on the App Store

## வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!

உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP:

jride

JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

GET IT ON Google Play

Download on the App Store

## SCHEDULED BOOKING

New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**HOTLINE : 706563213 / 703563213**

## JRIDE TAXI APP
## SPEED IT NET

பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.06.2024இல் வெளியிடப்பெற்றது